செ.வெ.எண் 202                                    நாள்; 17/03/2017

## பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டம் 1983-ன் கீழ் மீன்வளத்துறையில் பதிவு செய்யப்பட்டுள்ள கன்னியாகுமரி மாவட்டத்தை சார்ந்த விசைப்படகுகள் மற்றும் நாட்டுப்படகுகள் மீன்பிடித் தொழிலுக்கு மட்டுமே பயன்படுத்திட வேண்டும். வாடகை பெற்றுக் கொண்டு கடலில் மீன்பிடி தொழில் அல்லாத உல்லாச பிரயாணம் போன்ற பிற பணிகளுக்கு மீன்பிடி விசைப்படகுகளையோ, நாட்டுப்படகுகளையோ பயன்படுத்தக் கூடாது. மேலும் மீன்பிடிவிசைப்படகு/நாட்டுப்படகுகளில் கடலுக்குச் செல்லும் மீனவர்கள் மீன்வளத்துறையால் வழங்கப்பட்ட பதிவு சான்றிதழ், உரிமச்சான்று, மீனவர் அடையாள அட்டை, 90% மானியத்தில் வழங்கப்பட்டுள்ள ஆபத்துகால எச்சரிக்கை கருவி (Distress Alert Transmitter) மற்றும் 100% மானியத்தில் வழங்கப்பட்டுள்ள உயிர்காக்கும் மிதவைகள் (Lifebuoy) ஆகியவற்றை கண்டிப்பாக கடலுக்கு மீன்பிடிக்க செல்லும் போது உடன் எடுத்துச்செல்ல வேண்டும் என இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறார்கள். அவ்வாறு மீறி இதர பணிகளுக்கு விசைப்படகுகள் மற்றும் நாட்டுப்படகுகளை பயன்படுத்துவோர் மீது தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டம் 1983-ன் படி மீன்பிடி படகு பறிமுதல், பதிவுச்சான்று இரத்து செய்தல், மீன்பிடி உரிமம் இரத்து செய்தல் போன்ற நடவடிக்கைகள் சம்மந்தப்பட்ட விசைப்படகு மற்றும் நாட்டுப்படகு உரிமையாளர் மீது தொடரப்படும் என இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்,
(இருப்பு) நாகர்கோவில்.

வெளியீடு:
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
நாகர்கோவில்